# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
## FAST TRACK COURT AT MAGISTERIAL LEVEL, PATTUKKOTTAI

| | |
|---|---|
| **STC. No.** | **101/2024** |
| **பெயர்:** | **நாடிமுத்து -PW1** |
| **தந்தை பெயர் :** | **சுந்தரராஜன்** |
| **வயது:** | **57/2025** |
| **ஊர்:** | **வளவன்புரம், பட்டுக்கோட்டை,** |
| **தாலுக்கா** | **பட்டுக்கோட்டை** |
| **வேலை** | **பிளம்பிங் காண்ட்ரக்டர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of **18th day of July 2025**

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் 02.55 pm**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**எதிரி ஆஜர்**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலரான திரு. S. குமார் (பலகை எழுத்தர் நிலை -3) என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

1. என் மாத வருமானமாக ரூ.1,60,000/- ( ஒரு இலட்சத்து அறுபதாயிரம்) ஆக நான் கூறியுள்ளதுபடி, அதற்கு நான் ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளேனா என்றால், இல்லை.

2. என் புகார் மனுவில், நான், எதிரியின் மனைவிக்கு அறுவை சிகிச்சைக்காக எதிரி என்னிடம் கடன் கேட்டார் என்று சொல்லியிருக்கிறேன் என்றால், சரிதான். அது என்ன அறுவை சிகிச்சை என்று எனக்கு தெரியுமா என்றால், எனக்கு தெரியாது.

3. என் புகார் மனுவில்,நான், எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் என்னுடைய வங்கி கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்றால், ரூ.80,000/- (என்பதாயிரம்) இருந்தது.

4. நான் பிளம்பிங் காண்ட்ராக்ட், தனியாருக்கு பார்க்கிறேனா அல்லது அரசுக்கு பார்க்கிறேனா என்றால், தனியாருக்குதான் பார்க்கிறேன்.

5. என்னிடம் காட்டப்படும் EX-P2 ஆன Return Memo வில் என்ன காரணம் குறிப்பிட்டு திரும்பப்பட்டிருக்கிறது என்றால், “Exceeds Arrangement” என்ற காரணம் குறிப்பிட்டு திரும்பப்பட்டிருக்கிறது.

6. என்னிடம் காட்டப்படும் EX-P3ஆன வழக்கறிஞர் அறிவிப்பில் எதற்காக காசோலை திருப்பப்பட்டது என்பதற்கு, “Exceeds Arrangement” என்ற காரணம் குறிப்பிட்டு திருப்பப்பட்து என்று அனுப்பியுள்ளேன் என்று சொன்னால், சரிதான்.

7. எனது புகார் மனுவில், நான் எதற்காக காசோலை திருப்பப்பட்டது என்று சொல்லியிருக்கிறேன் என்றால், “ Insufficient Funds and “Exceeds Arrangement” -காக திருப்பப்பட்டது என்று கூறியிருக்கிறேன்.

8. நான் ப்ளம்பிங் காண்ட்ராக்ட் வேலை செய்ததற்கு என்னிடம் வேலைக்கான தொகையை வங்கியின் மூலம் தருவார்களா அல்லது காசோலை மூலம் தருவார்களா என்றால், ரொக்கமாக கையில் தருவார்கள்.

9. என்னிடம் காட்டப்படும் EX-P1 ஆன காசோலையில் உள்ள கையொப்பத்தில் இருக்கும் மையும் (Ink), இதர விபரங்களை பூர்த்தி செய்த மையும் (Ink) வெவ்வேறா என்று சொன்னால், சரியல்ல, அனைத்தும் ஒரே மைதான்(Ink). காசோலையின் பின்பக்கத்தில் இருக்கும் கையொப்பம் என்னுடையதுதான்.

10. அனைக்காட்டில் இருக்கும் சந்திரசேகரனை எனக்கு தெரியும். சந்திரசேகரன் மீது இந்நீதிமன்றத்தில் STC 66/2021 என்ற வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். சந்திரசேகரனும் இவ்வழக்கின் எதிரியும் நண்பர்கள் என்று சொன்னால், சரிதான். எதிரியை சந்திரசேகரன் மூலமாகதான் எனக்கு பழக்கம் என்று சொன்னால், சரியல்ல.

11. எதிரியினுடைய 25 காசோலைகளை, நான் கலெக்சனிற்காக செலுத்தி பணம் பெற்றேன் என்று சொன்னால், சரியல்ல.

12. எதிரியின் காசோலையான எண்ணான 373712 – ஐ 02.04.2020 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.11,000/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

13. எதிரியின் காசோலையான எண்ணான 234650 – ஐ 29.05.2020 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.19,900/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

14. எதிரியின் காசோலையான எண்ணான 023940 – ஐ 30.01.2021 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.800/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

15. எதிரியின் காசோலையான எண்ணான 023945 – ஐ 03.05.2021 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.5,000/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

16. எதிரியின் காசோலையான எண்ணான 023943 – ஐ 03.05.2021 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.300/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

17. எதிரியின் காசோலையான எண்ணான 023947 – ஐ 06.07.2021 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.300/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

18. எதிரியின் காசோலையான எண்ணான 023950 – ஐ 31.08.2021 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.15,000/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

19. எதிரியின் காசோலையான எண்ணான 023949 – ஐ 30.12.2021 அன்று

நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.18,500/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

20. எதிரியின் காசோலையான எண்ணான 023952 – ஐ 02.03.2022 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.600/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

21. எதிரியின் காசோலையான எண்ணான 023962 – ஐ 07.01.2023 அன்று நான் வங்கியில் தாக்கல் செய்து ரூ.52,000/- எடுத்தேன் என்று சொன்னால், தெரியவில்லை.

23. எதிரி ரூ.1,10,000/- ( ஒரு இலட்சத்து பத்தாயிரம்) புகார்தாரரிடம் கடன் பெற்றார் என்றும், அந்த கடனை மேற்கூறிய 11 காசோலைகளின் மூலம் செலுத்திவிட்டார் என்றும், மீதமுள்ள பூர்த்தி செய்யப்படாத 14 காசோலைகளில் ஒன்றான தாவா காசோலையை எதிரியிடம் கொடுக்காமல், அதை வைத்து அதிகபடியான தொகையை பூர்த்தி செய்து இவ்வழக்கினை தாக்கல் செய்தேன் என்று சொன்னால், சரியல்ல.

24. என்னுடைய வங்கி கணக்கின் வரவுசெலவை பார்த்தால் மேற்படி கூறிய 11 காசோலைகளை செலுத்தி பணத்தினை என் வங்கி கணக்கின் மூலம் பெற்றேன் என்ற விபரத்தை தெரிந்துகொள்ளலாமா என்றால், தெரிந்துகொள்ளலாம்.

25. எதிரி என் வீட்டிற்கு இதுவரை வந்ததில்லை என்று சொன்னால், சரியல்ல.

26. என் புகார் மனுவில் கூறியுள்ளதுபோல, எதிரியின் மனைவிக்கு எந்த ஒரு அறுவை சிகிச்சையும் நடைபெறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால், சரியல்ல.

27. எதிரியானவர் அரசுப்பணியில் இருப்பதால்,அவரை அழைக்களித்து மோசடியாக பணத்தை பெற வேண்டி இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியல்ல.

28. எதிரியினுடைய இவ்வழக்கின் காசோலையை தவிர மீதமுள்ள 13 காசோலைகளை வைத்துக்கொள்ள புகார்தாரருக்கு எந்த ஒரு சட்டப்படியான உரிமையும் இல்லை என்று சொன்னால், என்னிடம் அந்த 13 காசோலைகள் இல்லை.

29. எதிரியானவர் ஏற்கனவே கடன் தொகையை திரும்ப கொடுத்துவிட்டார் என்றும், புகார்தாரர் இவ்வழக்கின் காசோலையை அதிக தொகைக்கு பூர்த்தி செய்துள்ளார் என்றும், அதனால், இவ்வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

**<u>முடிக்கப்பட்ட நேரம்</u> 03:50 PM**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/-திரு. எம். விஷால் ஆனந்த்
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், (நடுவர் நிலை)
பட்டுக்கோட்டை.